Journal of Modern Tamil Research; Vol. 7, No. 3; 2019; Page:178-186.

ISSN: 2321-984X

Published by Raja Publications

---

# மூன்று நிலைகளின் விதியும் விஞ்ஞானங்களின் தரவரிசையும்: ஒகஸ்ட் கொம்டேயின் கோட்பாட்டு விளக்கங்கள்

**கலாநிதி எஸ்.எம். அய்யூப்,**
தலைவர், சமூகவியல் துறை
சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர்
கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
0094769643899இ மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகத்தை புதியதொரு அடிப்படையில் ஒழுங்கமைக்க வேண்டும் எனக் கருதிய ஒகஸ்ட் கொம்டே புதிய புதிய விதிகளை உருவாக்க முனைந்ததன் விஞ்ஞான ரீதியான வெளிப்பாடே மூன்று நிலைகளின் விதி (The law of three stages) தொடர்பான அவரது கோட்பாடாகும். மனித முன்னேற்றமும் சமூக வளர்ச்சியும் வேறு வேறு தனித்தனி நிகழ்வுகள் அல்ல, மனித முன்னேற்றத்தின் ஊடேதான் சமூக விருத்தி ஏற்படுகின்றது என இக்கோட்பாடு குறிப்பிடுகின்றது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அவர் விஞ்ஞானங்களையும் தரவரிசைப் (Classification of sciences) படுத்தினார். கொம்டேயினால் முன்வைக்கப்பட்ட மூன்று நிலைகள் விதியையும் அதிலிருந்து கிளைத்த விஞ்ஞானங்களின் தரவரிசையையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வுக்கட்டுரை இரண்டாம் நிலைத் தரவு மூலங்களை பயன்படுத்தி விபரிப்பு முறையில் தரவுகளை பகுப்பாய்வு செய்கின்றது. இறையியல் நிலை, நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை, புறமெய்மை நிலை ஆகிய மூன்று நிலைகளை மனிதமனம், சமூகம், விஞ்ஞானங்கள் கடந்து செல்கின்றன எனும் விடயம் கொம்டேயின் விளக்கங்கள் வழி இவ்வாய்வு கண்டுபிடித்திருக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** புறமெய்மை நிலை, இறையியல் நிலை, நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை

## 01. அறிமுகம்

பிரஞ்சுப் புரட்சி நடந்து முடிந்து பத்தாண்டுக்குப் பின் 1798 இல் பிரான்ஸ் நாட்டில் ஒகஸ்ட் கொம்டே (1798 – 1857) பிறந்தார். சமூகவியல் கற்கைப் புலத்திற்கான முதல் அடிப்படையை இட்டவராக பெரும்பாலான அறிஞர்களால் கொம்டே கொள்ளப்படுவதால் சமூகவியலின் தந்தை எனும் பெயரை தமதாக்கிக் கொள்கின்றார். ஆரம்பத்திலேயே அபாரமிக்க ஆற்றல் கொண்டவராகவும் அதிகாரத்தை எதிர்ப்பவராகவும் மற்றும் அறிவுத்தீட்சண்யமிக்கவராகவும் (Brilliant) காணப்பட்டார். அபாரமான மனன சக்தியும், வாசிப்பின் மீது பேரார்வமும் இயல்பாக இவருக்கு காணப்பட்டது (ராஜூ, 2007).

1818 இல் தத்துவவியலாளர் ஹென்றி டெ செயின்ட் சைமனுடன் (Hanri De Saint Simon, 1760 – 1825) இணைந்து 'சமூக மறுசீரமைப்பிற்கு அவசியமான விஞ்ஞான செயல்பாடுகள் தொடர்பான திட்டம்' (The Plan of the Scientific Operations Necessary for the Reorganization of Society) எனும் நூலை 1822 இல் வெளியிட்டார். கொம்டே 1830 முதல் 1842 வரை ஆற்றிய விரிவுரைகள் மொத்தமாக 4800 பக்கங்களில் தொகுக்கப்பட்டு ஆறு தொகுதிகளாக புறமெய்மை தத்துவம் (Positive Philosophy) எனும் பெயரில் வெளியாயின. 1826 இல் வாழ்க்கைத் தத்துவம் குறித்து தொடராக 72 விரிவுரைகளை கொம்டே ஆற்ற முனைந்தும் அவரது நரம்பு சீர்குலைவு (Nervous Breakdown) காரணமாக மூன்று விரிவுரைகளோடு நிறுத்தப்பட்டது. 1851 இல் கொம்டே நான்கு தொகுதிகள்

கொண்ட ‘புறமெய்மை அரசியல் அமைப்பு’ (System of Positive Politics) எனும் நூலை பூரணப்படுத்தினார். கொம்டே 05.09.1857 வயிற்றுப்புற்றுநோயால் (Stomach Cancer) இறந்து போனார்.

**02. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

## 02.1 மூன்று நிலைகளின் விதி (The Law of Three Stages)

சமூகவியல் புலத்திற்கு வழங்கிய மகத்தானதொரு பங்களிப்பாகவே ஒகஸ்ட் கொம்டேயின் மூன்று நிலைகளின் விதி தொடர்பான கோட்பாடு கொள்ளப்படுகின்றது. சாள்ஸ் டாவினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு கொம்டேயின் சிந்தனைப் புலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவே இக்கோட்பாடாகும் என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் (ராஓ, 2007).

இயற்கை நிகழ்வுகள் போலவே சமூக நிகழ்வுகளும் மாறாத இயற்கை விதிகளின் அடிப்படையிலேயே இயங்குகின்றன என கருதி சமூக வளர்ச்சி மற்றும் மனித முன்னேற்றம் ஆகியவை தொடர்பான கோட்பாட்டை கொம்டே உருவாக்கினார். இவரின் இக்கோட்பாடு சமூக வளர்ச்சியை அறிவியல் ரீதியாக விளக்க முனைகின்றது. இதனால் இக்கோட்பாட்டிற்கு கொம்டே மூன்று படித்தரங்களின் விதிகள் எனப் பெயரிட்டார். மனித சிந்தனை அல்லது அறிவு வளர்ச்சி அல்லது மனித முன்னேற்றம் அல்லது சமூக வளர்ச்சி இக்கோட்பாடு குறிப்பிடும் மூன்று படித்தரங்களின் வழியேதான் கடந்து செல்கின்றன என கொம்டே குறிப்பிடுகின்றார். மனித சிந்தனை அல்லது மனித முன்னேற்றம் கடந்து வந்த தொடர் படித்தரங்கள் (Successive stages) வழியேதான் சமூக வளர்ச்சியும் கடந்து வந்திருக்கின்றது என்பது இதன் பொருளாகும் (கிருஷ்ணமூர்த்தி, 2000)

தனிமனிதனது மனமும், மானிட சமூகத்தின் மனமும் சமாந்தரமாகவே பரிணாமமடைகின்றது என கொம்டே கருதுகின்றார். ஒரு தனிமனிதன் தீவிர நம்பிக்கையாளராக குழந்தைப் பருவத்திலும், விமர்சன ரீதியான நுண்பொருள் ஆய்வாளராக வாலிபப் பருவத்திலும், இயற்கையான தத்துவவாதியாக முழு மனிதப் பருவத்திலும் காணப்படுவது போலவே சமூக வளர்ச்சியும் இம்மூன்று நிலைகளை தாண்டி வருவதாக கொம்டே கருதுகின்றார் (ராஓ, 2007).

***நிலை ஒன்று:*** **இறையியல் நிலை அல்லது கற்பனையான நிலை (Theological Stage or Fictitious Stage)**

தொடக்க கால மனிதனின் சிந்தனை தெய்வத்தை அடிப்படையாக கொண்டதாகவே காணப்பட்டது. இயல் கடந்த சக்திகளின் செயல் காரணமாகத்தான் எல்லாத் தோற்றப்பாடுகளும் பூமியில் இடம்பெறுகின்றன என அவர்கள் நம்பினார்கள் (ராஓ, 2007). பூமியில் இடம்பெறும் பல்வேறுபட்ட நிகழ்வுகளுக்கான உண்மைக் காரணத்தை கண்டறிய முடியாமல் போன மனிதன் அவற்றுக்கு கற்பனையான விளக்கங்களைக் கொடுப்பதற்கு முற்பட்டான் அல்லது தெய்வீக சக்திகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்க விழைந்தான். அதேபோல் வெற்றி, தோல்வி, ஆரோக்கியம், நோய்கள் போன்றனவும் தெய்வம் அல்லது ஆவி காரணமாகவே ஏற்படுகின்றன என தொடக்க கால மக்கள் நம்பினார்கள் (கிருஷ்ணமூர்த்தி, 2000). கடவுளை மையப்படுத்திய இறையியல் நிலையானது மேலும் மூன்று நிலைகளாக பிரிக்கப்படுகின்றது.

**அ) போலிப்பொருள் வழிபாடு (Fetishism):**

ஆவி (Spirit) அல்லது ஆன்மா (Soul) போன்றவற்றின் இருப்புக் குறித்து இக்கால மனிதன் அக்கறை கொண்டதோடு ஒவ்வொரு நிகழ்வையும் ஆவிகளே நிகழ்த்துகின்றன என நம்பினான். இக்கால கட்டத்திலேயே போலிப்பொருள் வழிபாடு சமயமாக வடிவெடுத்தது. கடவுளையும் மனிதனையும் இணைக்கும் தரகர்களான சமயக் குருக்களின் (Priests) தேவை இக்காலத்தில் உணரப்படவில்லை.

**ஆ) பல தெய்வக் கொள்கை (Polytheism):**

மனிதனின் மனம் சிறந்த ஒழுங்கு நிலைக்கு வந்த போது போலிப் பொருள் வழிபாடு அவனுக்கு சிக்கல் மிக்கதாக தோன்றியது. எண்ணிலடங்கா போலிப்பொருட்கள் (Fetishes) குழப்பத்தை உண்டுபண்ணியபோது பல தெய்வங்கள் பற்றி சிந்திக்கத் தொடங்கினான். கடவுளின் ஆசீர்வாதத்தையும், நல்லபிப்பிராயத்தையும் பெற்றுக் கொள்வதற்காக சமயக் குருக்களின் தோற்றம் இக்காலத்தில் இடம்பெற்றது. இக்கால மனிதன் மந்திரத்தையும் அதனோடு இணைந்த செயல்களையும் கூட நம்பத் தொடங்கினான்.

**இ) ஒரு தெய்வ வழிபாடு (Monotheism):**

எண்ணிலடங்காத கடவுள்கள் பல்வேறு மனக் குழப்பங்களையும் முரண்பாடுகளையும் இக்கால மக்களுக்குத் தோற்றுவித்தன. இதனால் கடவுள்களை தரவரிசை அடிப்படையில் ஒழுங்குபடுத்திய போது இறுதியில் ஒரு கடவுள் எனும் சிந்தனைக்கு அது இட்டுச் சென்றது. மக்கள் ஒற்றைக் கடவுளின் அபார சக்தி குறித்து நம்பிக்கை கொண்டார்கள். இறையியல் நிலையின் மிக உன்னத நிலையாக (Climax) ஒரு தெய்வ வழிபாட்டு முறையே கருதப்படுகின்றது. இராணுவ ரீதியான சமூகத்திற்கு (Military Society) இறையியல் சிந்தனை பொருத்தமாக காணப்பட்டது.

***நிலை இரண்டு:* நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை (Metaphysical or Abstract Stage)**

இறையியல் சிந்தனையின் நீட்சியாக இந்நிலை கொள்ளப்படுகின்றது. கட்புலனாகாத ஆற்றல் அல்லது வலு (abstract power or force) உலக நிகழ்வுகளை தீர்மானிக்கின்றன மற்றும் அவற்றுக்கு வழி காட்டுகின்றன எனும் நம்பிக்கை இக்காலத்தில் வளர்ந்தது.

இக்காலத்தில் கற்பனைக்குப் பதிலாக பகுத்தறிவு வாதம் (Rationalism) ஓரளவு வளரத் தொடங்கியது. ஒவ்வொரு நிகழ்வுக்கும் பின்னால் கடவுள் இருந்து கொண்டு அவற்றை நிகழ்த்துவதில்லை என பகுத்தறிவு வாதம் கூறுகின்றது.

தூய காரணங்காணல் (Pure Reasoning) கொள்கையானது கடவுள் ஒரு கட்புலனாகாத உயிரி எனக் கூறுகின்றது. இக்காரணங்காணல் தத்துவம் இயற்கை உலகில் நிகழும் சில ஒழுங்குகளை (Order) கண்டறிய வழிவகுத்தது. நுண்பொருள் சிந்தனை கண்ணுக்குத் தெரிகின்ற ஒரு கடவுளின் இருப்பை கைவிடுகின்றது. இந்த நுண்பொருள் விளக்கங்களும் மனித மனதுக்கு திருப்தியை வழங்கவில்லை. இந்த சிந்தனை ஓரளவு சட்ட ரீதியான (Legal type of Society) சமூக அமைப்புக்கு பொருந்துகின்றது.

***நிலை மூன்று:* விஞ்ஞான அல்லது புறமெய்மை நிலை (Scientific or Positive Stage)**

புறமெய்மை நிலை விஞ்ஞான ரீதியாக சிந்திப்பதைக் குறிக்கின்றது. அவதானம் (Observation) மற்றும் உண்மைகளை வகைப்படுத்தல் (Classification of facts) விஞ்ஞான நிலையின் தொடக்கமாக

கொள்ளப்படுகின்றது. இந்நிலையில் அனைத்து நிகழ்வுகளும் அறிவுக் கண் கொண்டு பார்க்கப்படுவதுடன் சமய நம்பிக்கை மற்றும் மூட நம்பிக்கை (Superstition) போன்றவை நிராகரிக்கப்படுகின்றன. புறமெய்மைச் சிந்தனை கைத்தொழில் சமூகத்தின் (Industrial society) தேவையோடு பொருந்திப் போகின்றது.

**அட்டவணை 01. உலகைப் புரிந்து கொள்ள மானிட சமூகம் எடுத்த முயற்சிகள்**

| | |
|---|---|
| இறையியல் நிலை | இக்காலத்தில் சமூகம் கடவுளின் விருப்பு வெறுப்பின் வெளிப்பாடாகும் எனும் நம்பிக்கை நிலவியது. |
| நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை | இக்காலத்தில் சமூகம் இயல்கடந்த சக்திகளின் வழி அறியப்படாது இயற்கை வழி புரியப்பட்டது. |
| புறமெய்மை நிலை | இக்காலத்தில் விஞ்ஞான தொழிநுட்பங்கள் சமூக உலகில் பிரயோகிக்கப்பட்டது. |

கொம்டே மனித சிந்தனையின் விருத்தியை மட்டும் மூன்று நிலைகள் விதிகளுக்கூடாக விளக்கவில்லை. மாற்றமாக சமூகம் அல்லது சமூக ஒழுங்கமைப்புக்கள் காலந்தோறும் எவ்வாறு விருத்தியடைந்து வந்திருக்கின்றன என்பதனை சேர்த்தே விளக்கினார். மூன்று நிலைகளிலும் மனித மனம், மனித அறிவு, மனித சிந்தனை கட்டங்கட்டமாக விருத்தியடைந்து வந்தது போலவே சமூக ஒழுங்கமைப்புகளும் விருத்தியடைந்து வந்திருக்கின்றன என கொம்டே கருதுகின்றார்.

இறையியல் சிந்தனையானது (Theological thinking) இராணுவ மற்றும் மன்னராட்சியை மையப்படுத்திய சமூக ஒழுங்கமைப்புக்கு சமூகத்தை இட்டுச்சென்றது. இச்சமூகத்தில் கடவுளே படிநிலை அமைப்பில் அரசர்களுக்கெல்லாம் அரசராகக் கொள்ளப்பட்டார். கடவுள் வல்லமைமிக்க மகாவீரராகக் கருதப்பட்டார். இராணுவ ஒழுங்கமைப்புக்களால் மனித வர்க்கம் ஒழுங்குபடுத்தப்பட்டது. தெய்வீக சட்டங்களே அரசாண்டன. அச்சட்டங்கள் அரிதாகவே கேள்விக்குட்படுத்தப்பட்டன அல்லது கேள்விக்குட்படுத்தப்படாமலேயே ஏற்கப்பட்டன. சமூக சட்டங்கள் மீறப்படும் போது அல்லது சவாலாக்கப்படும் பொழுது கடுமையான தண்டனைகளால் மக்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

நுண்பொருள்சார் சிந்தனை (Metaphysical thinking) அசாங்கத்தைத் தோற்றுவித்தது. இது சட்டபூர்வமான சமூக ஒழுங்கமைப்பை ஒத்ததாகும். மத்தியகாலப்பகுதியில் காணப்பட்ட சமூக ஒழுங்கமைப்புகள் இத்தகைய சமூகத்தை ஒத்தது. இச்சமூக ஒழுங்கமைப்பில் தெய்வீக உரிமைகள் இருந்த இடத்தில் இயற்கை உரிமைகள் வைக்கப்பட்டன. மதகுருக்கள் தோற்றம் பெற்றார்கள். இக்காலகட்டத்து சமூகம் சட்டபூர்வமானதாக, முறைசார்ந்ததாக, கட்டமைக்கப்பட்டதாகக் காணப்பட்டது. ஐரோப்பாவில் தோற்றம்பெற்ற தேசிய அரசுகள் இக்காலகட்டத்துக்குரியவையாகும் (ராஓ, 2007).

புறமெய்மைச் சிந்தனையானது (Positive thinking) தொழிலதிபர்களை முதன்மைப்படுத்திய சமூகத்தை உருவாக்குகின்றது என கொம்டே கூறுகின்றார். மேலும் புறமெய்மைச் சிந்தனை கைத்தொழில் சமூகத்தை உருவாக்குவதாகவும் அச்சமூகத்திலுள்ள மனிதர்கள் இயற்கையின் வளங்களை பயன்படுத்துவற்கான ஆற்றல் கொண்டவர்களாக காணப்படுவார்கள் என கொம்டே கூறுகின்றார்.

வளங்களை மனித நலனுக்காக பாவிப்பது தொடர்பாகவும் உற்பத்தி மற்றும் கண்டுபிடிப்பு தொடர்பாகவும் அதிக கவனம் இக்காலத்தவர்களிடம் காணப்பட்டது.

## 2.2 விஞ்ஞானங்களின் தரவரிசை (Classification of Sciences)

விஞ்ஞானங்களின் வகைப்பாடு அல்லது தரவரிசை எனும் கொம்டேயின் கோட்பாடானது அவரது ‘மூன்று நிலைகள் விதி’ எனும் மற்றுமொரு கோட்பாட்டோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. மானிட முன்னேற்றம் குறிப்பிட்ட சில நிலைகளைக் கடந்து வந்துள்ளதைப் போல் விஞ்ஞான அறிவும் அதன் வளர்ச்சியில் குறிப்பிட்ட சில நிலைகளைக் கடந்தே வருகின்றன. எனினும் எல்லா விஞ்ஞானங்களும் இந்த வளர்ச்சிளை ஒரே வேகத்தில் அடைவதில்லை. எனவேதான் விஞ்ஞானங்கள் கடந்து வந்த இந்த வளர்ச்சிப் பாதையை ஒரு தரவரிசைப்படி ஒழுங்குபடுத்த வேண்டும் என கொம்டே விரும்பியதன் புத்திஜீவித்துவ வெளிப்பாடுதான் விஞ்ஞானங்களின் தரவரிசை குறித்த அவரின் கோட்பாடாகும்.

விஞ்ஞானங்களைத் தரப்படுத்தும் முயற்சி கொம்டேயிக்கு முன்பும் பல அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆரம்பகால கிரேக்க சிந்தனையாளர்கள் எல்லா வகையான அறிவையும் பௌதீகவியல் (Physics), ஒழுக்கவியல் (Ethics), அரசியல் (Politics) எனும் மூன்று தலைப்புக்களில் பிரித்து நோக்கினார்கள். பிற்பட்ட காலங்களில் பேகென் (Bacon) அறிவை மனிதனோடு தொடர்புபடுத்தி ஞாபகம் (Memory), கற்பனை (Imagination), காரணம் (Reason) என வகைப்படுத்தினார். ஞாபகத்தோடு தொடர்பான விஞ்ஞானமாக வரலாறும் (History) கற்பனையோடு தொடர்பான விஞ்ஞானமாக கவிதையும் (Poetry) காரணத்தோடும் செயலோடும் தொடர்பான விஞ்ஞானமாக பௌதீகவியலும் இரசாயனவியலும் (Physics and Chemistry) காணப்படுவதாக போகன் குறிப்பிட்டார். எனினும் கொம்டேயின் வகைப்பாடு இவையல்லாத மேலதிக சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றன (ராஜூ, 2007).

### அ. மூன்று நிலைகள் விதியோடு உள்ள தொடர்பு

கொம்டேயினால் வகைப்படுத்தப்பட்ட விஞ்ஞானங்கள் அவரது மற்றுமொரு பிரபல்யமான சமூக சிந்தனையான மூன்று நிலைகள் விதியோடு மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருப்பதனைக் காணலாம். தனிமனிதன் மற்றும் சமூகங்கள் கடந்து வந்த நிலைகளைப் போலவே விஞ்ஞானங்களும் அத்தகைய நிலைகளைக் கடந்து வருவதாக கொம்டே விளக்குகின்றார்.


### ஆ. தரவரிசைப்படுத்தலுக்கான நோக்கம்

விஞ்ஞானங்களை தரவரிசைப்படுத்தும் கொம்டேயின் முயற்சியானது பல சிறப்பான நோக்கங்களைக் கொண்டிருந்தன. தன்னால் தோற்றுவிக்கப்பட்ட புதிய கற்கையான சமூகவியலுக்கு ஒரு பின்னணியை (Background) உருவாக்குவதும் அதற்கானதொரு அடிப்படையை உருவாக்குவதுமே அதன் நோக்கமாகும். இதன் மூலம் அவர் சமூகவியலுக்கும் ஏனைய விஞ்ஞானங்களுக்கும் உள்ள தொடர்பை கச்சிதமாக கண்டுபிடித்தார். சில பொதுவான கொள்கைகளை கண்டுபிடிப்பதன் மூலம் பல்வேறுபட்ட விஞ்ஞானங்களுக்கிடையிலான உள்ளார்ந்த தொடர்பை ஸ்தாபிக்க முடியும் என நம்பினார்.

### இ. கொம்டே விஞ்ஞானங்களை தரசைப்படுத்திய விதம்

கொம்டேயின் விஞ்ஞானங்களின் தரவரிசை பின்வருமாறு அமைகின்றது.

**விளக்கப்படம் 01. விஞ்ஞானங்களின் தரவரிசை**




சிக்கல் தன்மை (Complexity), தங்கியிருக்கும் தன்மை (Dependency), பொதுத் தன்மை (Generality), இலகு தன்மை (Simplicity) போன்ற பண்புகள் எவ்வளவு தூரம் காணப்படுகின்றன என்பதனை அடிப்படையாக வைத்து விஞ்ஞானங்களை கொம்டே தரவரிசைப் வகைப்படுத்தினார்.

இலகுவானதும் (Simplest) குறைந்த தங்கியிருப்பையும் (Least dependent) கொண்ட விஞ்ஞானங்களை தரவரிசையின் அடிப்பாகத்திலும், அதிகரித்த சிக்கல் மற்றும் அதிகரித்த தங்கியிருப்பையும் (Most complex and dependent) கொண்ட விஞ்ஞானங்களை தரவரிசையின் மேல்பாகத்திலும் வைத்தே அடுக்கினார்.

கொம்டேயின் தரவரிசையில் கீழிருந்து மேலே செல்லச் செல்ல சிக்கல், தங்கிநிற்றல் போன்ற பண்புகள் அதிகரிக்கின்றன. அதேநேரம் பொதுத்தன்மை, இலகு தன்மை போன்றவை குறைந்து செல்கின்றன.

விஞ்ஞானங்கள் கொண்டிருக்கும் பொதுத்தன்மை, இலகுதன்மை, தங்கியிருக்கும் தன்மை போன்றவற்றின் விகிதத்திற்கேற்பவே அவை புறமெய்மை நிலையை அடைகின்றன. கணிதத்துக்கு பிறகு வானவியல் அதன் பொதுத் தன்மை, இலகு தன்மை காரணமாக விருத்தியை முதலில் அடைந்து கொண்டது என கொம்டே விளக்கின்றார். வானவியலுக்குப் பின் பௌதீகவியலும் அதன்பின் இரசாயனவியலும் விருத்தியை அடைந்தன. அதேபோல் புறமெய்மை நிலையை அடையாத விஞ்ஞானங்களும் அந்நிலையை அடைந்து விருத்தியடையும் என கொம்டே விளக்கினார். எல்லா விஞ்ஞானங்களும் இறையியல் நிலை, நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை, புறமெய்மை நிலை ஆகிய மூன்று நிலைகளையும் தாண்டியே வருகின்றன என்பது கொம்டேயின் கருத்தாகும். ஆனால் இம்மூன்று நிலைகளையும் ஒரே நேரத்தில் விஞ்ஞானங்கள் கடப்பதில்லை. புறமெய்மை நிலையை சில விஞ்ஞானங்கள் சீக்கிரம் அடையும் அதேவேளை சில விஞ்ஞானங்கள் புறமெய்மை நிலையை அடைவதில் பின்தங்கி வளர்ச்சியிலும்

பின்தங்கி விடுகின்றன. விஞ்ஞானங்களின் இந்த வளர்ச்சி விகிதங்களின் வேறுபாடே கொம்டேயை தரவரிசையின்பால் தூண்டியது. அதேபோல் ஒவ்வொரு விஞ்ஞானமும் அதற்கு முன் வளர்ச்சியடைந்த விஞ்ஞானத்தைச் சார்ந்தே வளர்ச்சி பெறுகின்றன. புறமெய்மை நிலையின் முக்கிய அம்சமாக அமைவது புறவயத் தன்மை (Objectivity) ஆகும். புறவயத் தன்மை என்பது பக்கச்சார்பின்றி நோக்கும் நடுநிலைத் தன்மையை குறிக்கின்றது. கணிதம், வானியல், பௌதீகவியல் இரசாயனவியல் போன்ற விஞ்ஞானங்களின் ஆய்வுப் பொருள் புறவயத் தன்மையை அதிகம் உள்வாங்குவதால் புறமெய்மை நிலையை சீக்கிரம் அடைந்து கொண்டன. ஆனால் உயிரியல், சமூகவியல் போன்ற விஞ்ஞானங்களின் ஆய்வுப் பொருளை புறவயத்தன்மைக்கு உட்படுத்துவது கடினமாக இருப்பதன் காரணமாக அவை புறமெய்மை நிலையை தாமதித்தே அடைகின்றன என்பது கொம்டேயின் கருத்தாகும் (கிருஷ்ணமூர்த்தி, 2000).

### ஈ. விஞ்ஞானங்களின் தரவரிசை கணிதத்திலிருந்து (Mathematics) ஆரம்பிக்கின்றது

மனதின் அடிப்படைக் கருவியாக (Basic tool of mind) கணிதத்தை கொம்டே கருதுகின்றார். கணிதத்தின் உதவியோடு மனித மனம் எங்கு சென்றும் சிந்த முடியும். இயற்கை விதிகளை விசாரணை செய்வதற்கு மனித மனத்திற்கு கை கொடுக்கும் மிகப் பலமான கருவியாக கணிதமே காணப்படுகின்றது. இதன் காரணமாக விஞ்ஞானங்களின் தரவரிசையில் கணிதத்தை முதலில் வைக்கின்றார். எனினும் கணிதத்தை அவர் விஞ்ஞானங்களின் தொகுதிக்குள் சேர்க்காமல் எல்லா விஞ்ஞானங்களுக்கும் கணிதம் அடிப்படையாக அமைகின்றது எனக் கருதினார். ஏனைய எல்லா விஞ்ஞானங்களையும் விட பழமையானதாகவும், கட்சிதமானதாகவும் கணிதம் காணப்படுவதாக கொம்டே குறிப்பிடுகின்றார்.


கணிதத்துக்கு மகத்தான முக்கியம் கொடுப்பதற்கான மற்றுமொரு காரணம் அது ஒரு விஞ்ஞானமாகவும் கொள்ளப்படுகின்றது. விஞ்ஞான சிந்தனைக்கு அடிப்படையாக அமையும் பொருட்களுக்கிடையிலான தொடர்பை கணிதம் கண்டுபிடிக்கிறது. அதேபோல் பொருட்களுக்கும், கருத்துக்கும் உள்ள தொடர்பையும் அளவீடு செய்கின்றது.

ஏனைய விஞ்ஞானங்கள் கணிதத்தில் தங்கியிருக்கின்றது. ஆனால் கணிதம் எவ்விஞ்ஞானங்களிலும் தங்கி நிற்காது சுதந்திரமாக செயல்படுகின்றது. எனவேதான் ஏனைய எல்லா விஞ்ஞானங்களையும் தாங்கி நிற்கின்றது என கொம்டே கூறுகின்றார் (கிருஷ்ணமூர்த்தி, 2000).

### உ. உயிரின விஞ்ஞானமும் உயிரற்ற விஞ்ஞானமும் (Organic sciences and Inorganic sciences)

விஞ்ஞானங்களின் தரவரிசையில் கணிதமே எல்லா விஞ்ஞானங்களுக்கும் அடிப்படையாக அமைகின்றது என விளக்கிய கொம்டே அதன் பின்னால் வரும் விஞ்ஞானங்களை இயற்கை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

**விளக்கப்படம் 02. உயிரின விஞ்ஞானமும் உயிரற்ற விஞ்ஞானமும்**




உயிர் வளர்ச்சியற்ற நிகழ்வுகளை விளக்கும் விஞ்ஞானங்கள் (வானவியல், பௌதீகவியல், இரசாயனவியல்) ஒப்பீட்டளவில் இலகுவானவையாகவும், சிக்கல் தன்மை குறைந்தவையாகவும், புறவயத் தன்மையை அதிகம் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. உயிரின நிகழ்வுகளை விளக்கும் விஞ்ஞானங்கள் (உயிரியல், சமூகவியல்) அதிக சிக்கல் தன்மை, மிகுந்த தங்கியிருப்பு, குறைந்த புறவயத் தன்மை போன்ற பண்புகளைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன (கிருஷ்ணமூர்த்தி, 2000).

**ஊ. சமூகவியல் உட்பட சமூக விஞ்ஞானங்கள் தரவரிசையின் உச்சத்தில் வருகின்றன.**

கொம்டேயின் திட்டத்தில் சமூக விஞ்ஞானங்களை தரவரிசையின் உச்சத்தில் வைப்பதற்கான காரணம் அவை அவற்றுக்கு முன்னால் உள்ள விஞ்ஞானங்களின் (Anterior sciences) வளங்கள் மற்றும் வளர்ச்சி அனைத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றன என்பதனாலாகும். அத்தோடு ஏனைய எல்லா விஞ்ஞானங்களும் சமூக விஞ்ஞானங்களுக்காக தயார்படுத்தப்பட்டவையே என்பது கொம்டேயின் கருத்தாகும். காரணம் சமூக விஞ்ஞானங்கள் சமூக நடத்தை பற்றிப் பேசுகின்றன. மானிட சமூகத்தின் நலனுக்காகவே எல்லா விஞ்ஞானங்களும் சேவை செய்கின்றன.

## 2.3 சமூகவியல் குறித்த கொம்டேயின் கருத்துக்கள்

சமூகவியலின் உருவாக்கத் தந்தையான கொம்டே தான் உருவாக்கிய விஞ்ஞானத்திற்கு சமூகப் பௌதீகவியல் (Social physics) என்றே ஆரம்பத்தில் பெயர் வைத்தார். பெல்ஜிய புள்ளிவிபரவியல் நிபுணர் அடோல்ஃப் குவென்டலெட் (Adolf Quentelet) இப்பெயரை ஏற்கனவே தனது கட்டுரையில் பயன்படுத்தியிருப்பது தெரியவந்த போது கொம்டே அப்பெயரை விடுத்து சமூகவியல் எனும் சொல்லாடலை 1839 இல் பயன்படுத்தினார். சமூகம் (Society) எனும் கருத்தைக் குறிக்கும் இலத்தின் சொல்லான சோசியஸ் (Socious) எனும் சொல்லினதும், விஞ்ஞானம் (Science) அல்லது கற்கை (Study) எனும் கருத்தைக் குறிக்கும் கிரேக்க சொல்லான லோகஸ் (Logos) எனும் சொல்லினதும் இணைப்பினால் உருவானதே சமூகவியல் எனும் சொல்லாகும். சொற்பிறப்பியல் சமூகவியல் என்பது சமூகத்தின் விஞ்ஞானமாகும் (Science of Society) எனக் கூறுகின்றது.

கணிதம், உயிரியல், இரசாயணவியல், பௌதீகவியல், வானியல் போன்ற விஞ்ஞானங்களில் சமூகவியல் தங்கியிருக்கின்றது. இவ்விஞ்ஞானங்கள் இறையியல் சிந்தனை மற்றும் நுண்பொருள் கோட்பாட்டியல் சிந்தனை போன்ற கட்டங்களிலிருந்து விடுபட சில காலங்களை எடுத்தன. சமூகவியலும் புறமெய்மை விஞ்ஞானங்களின் முழுத்தன்மையை அடைய சில காலங்களை எடுக்கும் என கொம்டே கருதினார்.

சமூகவியல் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருப்பதாக கொம்டே கருதுகின்றார். சமூக நிலையியல் (ளுழஉயைட ளுவயவஉைள) சமூக இயங்கியல் (Social Dynamic) என்பவையே அவை இரண்டுமாகும். இவை இரண்டும் வெவ்வேறானவையல்ல. ஒரே கோட்பாட்டின் இரு கூறுகள் அல்லது இரு அம்சங்கள்.

முதலாவது ஒழுங்கையும் (Order) இரண்டாவது முன்னேற்றத்தையும் (Progress) குறிக்கின்றது. ஒழுங்கும் முன்னேற்றமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை. முன்னேற்றத்திற்கு உதவாத எந்தவொரு ஒழுங்கும் உண்மையான ஒழுங்கு கிடையாது. அதேபோல் சமூகத்தில் ஒழுங்கை கருத்தில் கொள்ளாத எந்த முன்னேற்றமும் உண்மையான முன்னேற்றம் கிடையாது (ராஓ, 2007). சமூகத்தை மிக நுண்ணிய அடிப்படையில் படிக்க வேண்டும் என்பதற்காகவே சமூகவியலை இவ்வாறு கூறு போட்டரே தவிர சமூகவியல் மொத்தமாக ஒன்றுதான் என்பது கொம்டேயின் கருத்தாகும். அதேபோல் இவை இரண்டு அம்சங்களையும் ஒன்றாக சேர்த்துப் படிக்கும் போதுதான் சமூகத்தின் முழுமையை புரிந்து கொள்ள முடியும்.

***சமூக நிலையியல்***


கொம்டேயினுடைய நிலையியல் அவரது மூன்று படித்தரங்களின் விதியுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. சமூக ஒழுங்கின் (Social Order) பல்வேறுபட்ட பகுதிகளின் எதிர்வினை (சுநயஉவழைெ) மற்றும் செயல் (யுஉவழைெ) என்பவற்றின் சட்டங்களே சமூக நிலையியல் என்பவற்றின் மூலம் கருதப்படுகின்றது. குடும்பம், பொருளாதாரம் போன்ற பிரதான சமூக நிறுவனங்களோடு சமூக நிலையியல் தொடர்புபடுகின்றது. சமூக நிகழ்வுகளின் இணக்கப்பாட்டை சமூக நிலையியல் வேண்டி நிற்கின்றது. சமூக அமைப்பினுடைய பகுதி மற்றும் முழுமைகளிடையே இயல்பான நல்லிணக்கம் (Harmony) அவசியமாகும். ஒரு உயிரியைப் போல சமூகத்தின் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று

தொடர்புபட்டிருப்பதால் சமூகத்தைப் படிக்கும் போது பகுதியாக படிக்க முடியாது. சமூகத்தின் இத்தகைய பகுதிகளில் நல்லிணக்கம் குன்றிப் போகும் போது சமூகத்தில் நோயியல் நிலை (Pathological Situation) தோற்றம் பெறும் என கொம்டே குறிப்பிடுகின்றார். சுருக்கமாக சொன்னால் சமூக நிலையியல் சமூகத்தின் அல்லது சமூக ஒழுங்கமைப்பின் ஒற்றுமை (Unity) குறித்துப் பேசுகின்றது (ராஜூ, 2007).

சமூக ஒழுங்கைப் பாதுகாக்கும் பிரதான சமூக நிறுவனங்கள் குறித்து சமூக நிலையியல் கவனம் செலுத்துகின்றது. உதாரணமாக குடும்பமானது சமூக கட்டமைப்பில் மிக முக்கியமானதொரு நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது. அதேபோல் சமூக ஒழுங்கு, சமூக முன்னேற்றம் போன்றவற்றுக்கு அடிநாதமாக அமைகின்றது.

கொம்டே சமூக நிலையியலின் மூன்று அம்சங்கள் குறித்து விளக்குகின்றார்.

**விளக்கப்படம் 03. சமூக நிலையியலின் அம்சங்கள்**




**அ) மொழி:** பொதுவான மொழி ஒன்றில்லாமல் ஒற்றுமை (Solidarity) மற்றும் சமூக ஒழுங்கு சாத்தியமில்லை.

**ஆ) சமயம்:** சமயமே நடத்தைக்கான வழிகாட்டலை வழங்குவதோடு சமூக ஒழுங்கின் அடிநாதமாகவும் தொழிற்படுகின்றது.

**இ) தொழிற்பிரிவு:** அரசின் வெற்றிக்கு இது அவசியமாகும். சமூகத்தில் உள்ள மக்களிடையே சுதந்திரத்தை அது கொண்டு வருகின்றது.

***சமூக இயங்கியல்***

சமூகத்தின் பாகங்கள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது என சமூக நிலையியல் ஆராய, சமூக இயங்கியல் முழு சமூகத்தையும் மொத்தமாக எடுத்து சமூகம் எவ்வாறு முன்னேற்றமடைந்து வந்திருக்கின்றது, காலம் முழுவதும் எவ்வாறு மாறிச் செல்கின்றது என

ஆராய்கின்றது. மனித நாகரீகம் பல்வேறு காலகட்டங்களில் எவ்வாறு முன்னேற்றமடைந்து வந்திருக்கின்றது என சமூக இயங்கியல் படிக்கின்றது.

சமூக நிலையியல் சமூகத்தில் ஒழுங்கு எவ்வாறு தொடர்ந்தும் பேணப்படுகின்றது என்பதனையும், சமூக இயங்கியல் காலத்துக்கு காலம் சமூகம் எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதனை ஆராய்வதை மையமாகக் கொள்கின்றது. சமூக நிறுவனங்களின் தொழிற்பாடுகள் திருத்தங்களுக்கு அல்லது மாற்றங்களுக்கு உள்ளாகும் போது இயங்கியல்கள் (னுலயெஅலைஉள) தோற்றம் பெறுகின்றன. மானிட மனம் மற்றும் சமூகம் போன்றவற்றின் விருத்திக்கு சமூக இயங்கியல் அவசியம் என கொம்டே கருதுகின்றார். சமூக மாற்றம் மற்றும் சமூக முன்னேற்றம் போன்றவற்றின் செயன்முறை எவ்வாறு என்பதனை புரிந்து கொள்ள சமூக இயங்கியலானது வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தங்கியிருக்க வேண்டும் என கொம்டே கருதுகின்றார்.

**முடிவுரை**

கொம்டேயால் அறிவுப் புலத்திற்கு வழங்கப்பட்ட கருத்துகள் பல தளமாற்றங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. மனித சிந்தனை, சமூகம், விஞ்ஞானங்கள் இன்றிருக்கும் நிலையை அடைவதற்கு அவை மூன்று வரலாற்றுக் கட்டங்களை தாண்டி வந்திருக்கின்றன என்பது கொம்டேயின் சிந்தனையாகும்.

**உசாத்துணை**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூகவிஞ்ஞானங்கள் துறை, இலங்கைதென்கிழக்குப் பல்களைக்கழகம்
2. கிருஷ்ணமூர்த்தி, ஜெ. (2000). *சமூகவியல் கோட்பாடுகள்.* சென்னை. அண்ணாமலை பல்கலைக்கழகம்.
3. Anderson, N. & Schlunke, K. (2008). *Cultural theory in Everyday Practice*. Oxford: Oxford University Press.
4. Best, S. (2003). *A Beginner's Guide to Social Theory*. London: Sage Publication
5. Elliot, A. (2009). *Contemporary Social Theory: An Introduction*. London: Routledge.
6. Gells, Richard Levince, Ann, (1999). *Sociology: Introduction*. New York: McGraw Hill Inc.
7. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
8. Haralambos and Holborn, (2000). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.
9. Johnson, Harry, (1999). *Sociology: A Systematic Introduction.* New Delhi: Aliede Publishers.
10. Rao Shankar, (2007). *Sociology*: *Primary Principles.* New Delhi: S. Chand and Commpany Ltd.
11. Harrington, A. (2005). *Modern Social Theory: An Introduction*. Oxford: Oxford Univ. Press.
12. Wingwood, A.S. (2000). *A Short Histry of Sociological Thoughts.*USA: McMillan Press.
13. Hadden, R.W. (1997). *Sociological Theory*.Gunada: Broadway Press.